දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල් / ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ED/3/Addl.Sec./Planning/Gen

දිනය / திகதி / Date: 2011 மே மாதம் 10 ஆம் திகதி

சுற்றறிக்கை இலக்கம்: 2011/17

2011 மே மாதம் 10 ஆம் திகதி

சுற்றறிக்கை இலக்கம்: 2011/17

மாகாண பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,
மாகாண கல்விச் செயலாளர் அனைவருக்கும்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,
கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,
வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,
பாடசாலை அதிபர்கள், பிரிவேனாதிபதிகள் அனைவருக்கும்.

## கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டமாகும்

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு - "சுரெக்கும் பவ்வ"

ஒரு நாட்டின் எதிர்காலத்தையோ சமூக அபிவிருத்தியையோ தீர்மானிக்கும் பிரதான காரணியாக அமைவது அதன் சிறுவர் தலைமுறையாகும். அறிவால், திறன்களால் மற்றும் சாதகமான உளப்பாங்குகளால் பாடசாலையில் கட்டி வளர்க்கப்படுகின்ற சிறார்கள் 18 வயது நிறைவடைகையில் நற்பிரசைகளாகவே சமூகத்துடன் ஒருங்கிணைகின்றனர். மாபெரும் ஆளுமை படைத்த அத்தகைய மனிதன் ஒரு நாட்டுக்கு விலை மதிக்க இயலாத வளமாக அமைகின்றான்.

பாடசாலை மாணவன் அல்லது மாணவியின் அன்றாட செயலூக்கமிக்க காலப்பகுதியில் அரைவாசியோ அல்லது அதற்கு கிட்டிய காலப்பகுதியோ பாடசாலையிலேயே கழிகின்றது. அத்தகைய பிள்ளையின் அபிவிருத்தித் துறையில் பாடசாலை தீவிரமான பொறுப்பினையும் கடமையையும் வகிக்கின்றது. சிறுவர் என்பது எளிதில் துஷ்ப்பிரயோகத்திற்கு பலியாக்கப்படக்கூடிய ஆட்களின் கூட்டமாக அமைகின்றது. முதிர்ச்சியடையாத மனம், சமூக அனுபவம் பலவீனமாதல், மூளை வளர்ச்சியடைந்து வருதல், வீட்டில் இடம்பெறும் துன்புறுத்தல்கள், வீட்டுவன்முறை, தாய் - தந்தை பிரிந்து வாழ்தல், உரிய அன்போ பாசமோ கிடைக்காமை, வாழும் சூழல் துர்நடத்தை மீது நாட்டம் கொண்டிருத்தல் போன்ற காரணிகளின் பேரில் அத்தகைய சிறுவர் தலைமுறை மென்மேலும் அநாதரவான நிர்க்கதியற்ற நிலையுறுவதோடு நாளுக்கு நாள் அவர்களின் ஆளுமையை நலிவடையச் செய்து துஷ்ப்பிரயோகங்களின் பால் நெருங்குவதற்கான போக்கு மிகவும் பலம்வாய்ந்ததாக காணப்படுகின்றது.

பாடசாலை நுழைவாயில் மூலமாக பாடசாலைக்குள்ளே பிரவேசித்ததும் ஒவ்வொரு மாணவ மாணவியினதும் பொறுப்பும் பாதுகாப்பும் அவன் அல்லது அவள் அந்த வளவில் இருந்து வெளியேறும் வரை பாடசாலையதிபர் மற்றும் ஆசிரியர் குழாமினைப் போன்றே பாடசாலை உதவி பணியாளர் குழாமினாலும் வகிக்கப்படல் வேண்டும். அதற்கமைய அனைத்துவிதமான துஷ்ப்பிரயோகங்களிலிருந்தும் சிறார்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அத்தகைய ஒட்டுமொத்தமான பணியாளர் குழாமினதும் தலையாய கடமையும் தார்மீக பொறுப்புமாகும்.

பிள்ளையின் அபிவிருத்திக்கு தடையேற்படுத்தும் விதத்தில் உடல் ரீதியாக, உள ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கும் அழுத்தத்திற்கும் இலக்காக்குவதைப் போன்றே தமது சட்டரீதியான பொறுப்பினை தவறவிடுவதன் மூலமாகவோ கவனயீனம் காரணமாகவோ பிள்ளை அத்தகைய துன்புறுத்தலுக்கோ அழுத்தத்திற்கோ இரையானால் அதனை சிறுவர் துஷ்ப்பிரயோகம் எனப் பொருள் கூற முடியும்.

இவ்வுலகில் பிறக்கும் பாலகன் 18 வயதினைப் பூர்த்தி செய்து நல்லதொரு மனிதனாக சமூகத்துடன் இணைய, கட்டிவளர்க்கப்பட கிடைக்க வேண்டிய காரணிகள் யாவை? தற்போது அத்தகைய காரணிகளை முழு உலகுமே சிறுவர் உரிமைகளென ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தகைய காரணிகள் ஒன்றொன்றாக கைநழுவிச் செல்கையில் மனிதன் பல்வேறு பலவீனங்களுக்கிடையே சமூகத்துடன் ஒருங்கிணைகின்றான். மேற்படி பலவீனங்கள் சமூகத்திற்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய வித்துக்களாகும். இலங்கை 1990.01.20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனத்தில் கையொப்பமிட்டு 1991.07.12 ஆம் திகதி இந்நாட்டின் சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அச்சாசனத்தை உத்தியோகபூர்வமாக ஏற்று அங்கரித்துள்ளது. எனவே நாம் அதற்கு மதிப்பளிக்க வேண்டியுள்ளது.

சிறுவர் உரிமைகளை மீறுதலும் சிறுவர் துஷ்ப்பிரயோகமும் சிறுவர்களின் ஆளுமையை நலிவடையச் செய்யும் தீவிரமான காரணியாகும். எனவே அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகள் நிறைந்த சிறந்த ஆளுமை படைத்த பிள்ளைகளை உருவாக்குவது பாடசாலையின் முக்கியமான குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பான தேடல்களின் போது சிறுவர் துர்ப்பிரயோகம் விருத்தியடைய பின்வரும் காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளதாக இனங்காணலாம்.

- வயதுடன் சார்புடையதாக பாலியல் கல்வி கிடைக்காமை.
- சிறுவர்களை துஷ்ப்பிரயோகம் செய்பவர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள அறிந்திராமை.
- சிறுவர் துஷ்ப்பிரயோகம் என்றால் என்னவென்பதை இனங்கண்டிராமை.
- சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்பூட்டலின்மை.
- சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக உள்ள நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பொறுப்பினைத் தவறவிடுதல்.
- தமது சிக்கல்கள், பிரச்சினைகளைப் பற்றிப் பேச, ஆலோசனை பெற நம்பிக்கைமிக்க ஒருவர் இன்மை.
- துஷ்ப்பிரயோகம் செய்பவர்களுக்கு இரையானால் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பிள்ளைகள் அறிந்திராமை.
- ஆளுமை விருத்தி பலவீனமடைந்திருத்தல்.
- குடும்பங்களில் பல்வேறு சிக்கலான நிலைமைகள் தோன்றுதல்.

துஷ்ப்பிரயோகம் செய்பவர்களிடமிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகவும் சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை தடுப்பதற்காகவும் துர்ப்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவும் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தினால் நிறுவப்பட்டதாகும். மேற்படி அதிகாரசபையின் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு வேலைத்திட்டம் பாடசாலையில் போன்றே அதற்கு வெளியிலும் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்ப்பிரயோகங்களை ஒழிக்கவும் சிறுவர் நேயமுள்ள கல்விச் சுற்றாடலைப் பாடசாலையில் ஏற்படுத்துவதற்காகவும் எல்லா இடங்களிலும் சிறுவர்களை துர்ப்பிரயோகம் செய்பவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும் சிறந்த ஆளுமை படைத்த சிறுவர்களை உருவாக்குவதற்காகவுமுள்ள முக்கியமான பணியென நான் நம்புகிறேன். எனவே கீழே விபரமாக காட்டப்படுகின்ற பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழு வேலைத்திட்டத்தையும் மேற்படி அதிகாரசபையின் கடமைப்பொறுப்புக்களையும் வெற்றியீட்டச் செய்ய ஒத்துழைப்பினைக் கோருகின்ற எல்லாச் சந்தர்ப்பத்திலும் தேவையான ஒத்துழைப்பினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு "சுரெக்கும் பவ்வ" என அழைக்கப்படுவதோடு, அதன் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

1. அனைத்து விதமான சிறுவர் துர்ப்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்தல்.
2. பல்வேறு விதமான துஷ்ப்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகள் பாடசாலையில் இருப்பார்களெனில் மிகவும் இரகசியமாக இனங்காணலும் அத்தகைய பிள்ளைகளுக்கு அவசியமான கவனிப்பையும் பாதுகாப்பினையும் உறுதிசெய்வதும் சட்டத்தை அமுலாக்கும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினை விழிப்பூட்டலும்.
3. கல்விச் செயற்பாட்டில் பின்தங்கிய பிள்ளைகளை வகுப்பு மட்டத்தில் இனங்காணலும் அதில் தாக்கமேற்படுத்தியுள்ள சமூக, பொருளாதார காரணிகள் மற்றும் குடும்பப் பின்னணியை இனங்காணும் பொருட்டு நடவடிக்கை எடுத்தலும், அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், தொடர் நடவடிக்கைகள் மற்றும் வளப் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்கான வழிப்படுத்தல்களும்.
4. விசேட உளரீதியான அல்லது உடல் ரீதியான தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு உதவி புரிதல்.
5. பிள்ளைகளின் மனஅழுத்தங்களை குறைப்பதில் தாக்கமேற்படுத்தக்கூடிய ஆக்கபூர்வமான் சிகிச்சை நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.
6. பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான உணர்வுகளையும் துன்பகரமான அனுபவங்களையும் வெளிப்படுத்தலும் பரிமாற்றிக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கலும்.
7. பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான இடைத்தொடர்புகளை மேம்படுத்தல்.
8. பிள்ளைகளுக்குச் செவிமடுத்தல்.
9. பிள்ளைகளின் பாதுகாப்புக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவைகளையும் இணைப்பாக்கத்தையும் தொடர்ச்சியாக வழங்குதல்.
10. பாடசாலைப் பிள்ளைகள் புகைபிடித்தல், மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை, பாலியல் தொல்லைகள் மற்றும் ஏனைய தீய நடத்தைகளின் பால் வழிநடத்தப்படுவதை தடுத்தல்.
11. ஒழுக்கம் நிறைந்த நடத்தைகள் தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்குள்ள பொறுப்பு பற்றி விளக்கமளித்தலும் ஆக்கமுறையான அவர்களின் ஆளுமையைக் கட்டியெழுப்புதலும்.
12. ஒழுக்கமுள்ள சிறுவர் நேயமுடைய பாடசாலை சுற்றாடலை உருவாக்குதல்.
13. நிறைவான ஆளுமை கொண்ட பிரசைகளை தேசத்திற்கு உரிதாக்கிக் கொடுத்தல்.

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் உள்ளடக்கம் கீழே காட்டப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

| மாணவர் எண்ணிக்கை | மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை | மாணவர் பிரதிநிதித்துவம் | ஆசிரியர் குழாம் பிரதிநிதித்துவம் | பெற்றோர் பிரதிநிதித்துவம் |
|---|---|---|---|---|
| 200 க்கு குறைவான | 10 | 6 | 2 | 2 |
| 200-500 | 20 | 14 | 3 | 3 |
| 500-1000 | 30 | 22 | 4 | 4 |
| 1000 க்கு மேல் | 40 | 30 | 5 | 5 |

குழுவின் உள்ளடக்கம்

மாணவர் பிரதிநிதித்துவமானது ஆண்டு 6 இல் இருந்து உயர்தரம் வரை பாடசாலையதிபரின் தற்றுணிபின் பிரகாரம் நியமிக்கப்படல் வேண்டும். பாடசாலையின் பிரதான மாணவத் தலைவன் மற்றும் தலைவி குழுவின் நிரந்தர மாணவ அங்கத்தவர்களாக மேற்படி மாணவர் பிரதிநிதித்தவத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

சிறந்த ஒழுக்கமுடைய மாணவ, மாணவியருடன் சுமுகமாக செயலாற்றுகின்ற அத்துடன் மாணவ, மாணவியரது அன்புக்குப் பாத்திரமான ஆசிரியர்கள் ஆசிரியர் குழாமின் பிரதிநிதித்துவத்திற்காக நியமிக்கப்படல் வேண்டுமென்பதோடு, தன்னிச்சையாக முன்வரும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமையும் சிறப்பிடமும் வழங்கப்படல் வேண்டும். குறைந்த பட்சம் ஓர் ஆசிரியரேனும் பிரதிநிதித்துவம் செய்யப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலையதிபரால் நியமிக்கப்படல் வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக சிறுவர் துஷ்ப்பிரயோக குற்றச்சாட்டுகளற்ற ஒழுக்கசீலர்களான பெற்றோர்கள், பெற்றோர்களின் பிரதிநிதித்துவத்திற்காக பாடசாலையதிபரால் நியமிக்கப்படல் வேண்டும்.

வருடத்திற்கொரு தடவை குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென்பதோடு, மொத்த அங்கத்தவர்களின் 1/3 பங்கினரது எதிர்ப்பு இல்லாவிடின் அங்கத்துவத்தை தொடர்ச்சியாக வகிக்கலாம். எவரேனும் அங்கத்தவர் தொடர்பில் ஆட்சேபனையேதும் இருப்பின் அதற்கான காரணங்களை அறிவித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரிடம் முறைப்பாடு செய்யலாம். இரகசியமான விசாரணையொன்றின் பின்னர் அதிகாரசபையின் தவிசாளரால் தொடர்ந்தும் மேற்படி அங்கத்தவர் அங்கத்துவம் வகிக்க வேண்டுமா என்பது பற்றிய விதப்புரை வழங்கப்படல் வேண்டும்.

இக்குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் மற்றும் 5 செயற்குழு அங்கத்தவர்களும் மாணவ, மாணவியர் மத்தியில் இருந்து நியமிக்கப்படல் வேண்டும். குழுவின் அறிக்கைகள் அனைத்தும் செயலாளரால் பேணிவரப்படல் வேண்டுமென்பதோடு, கூட்ட அறிக்கைகள் அனைத்தும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஏற்புடைய மாவட்ட அலுவலகத்தின் இணைப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### குழுக்கூட்டங்கள்

மாதமொன்றுக்கு ஒரு தடவை வீதம் குறைந்த பட்சம் பாடசாலைத் தவணையொன்று மூன்று தடவையேனும் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும்.

### ஆலோசனை

குழுவின் பிரதான ஆலோசகராக பாடசாலையதிபர் விளங்க வேண்டும். அவரது தற்றுணிபின் பேரில் பிரதிப் பாடசாலையதிபரொருவரோ அல்லது பிரிவுத் தலைமை ஆசிரியரொருவரோ அதற்காக நியமிக்கப்படல் வேண்டும்.

### இணைப்பாக்கம்

பாடசாலையில் மாணவர் ஆலோசனைப் பணிக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர் அல்லது மாணவ, மாணவியரது அன்புக்குப் பாத்திரமான ஆசிரியரே இதற்குப் பொருத்தமானவர். மேற்படி இணைப்பாளர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் / அல்லது மாவட்ட உளச் சமூக இணைப்பாளருடன் இணைப்பாக்கத்தைப் பேணி வர வேண்டுமென்பதோடு அவர்கள் மாகாண, வலய, கோட்ட மட்டக் கல்வியதிகாரிகளுடன் நேரடியாகவே தொடர்புகளைப் பேணுவர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நேரடியாகவே மாவட்டச் செயலாளர் ஊடாக அதிகாரசபையின் மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் மற்றும் உளச் சமூக இணைப்பு உத்தியோகத்தர் மூலமாக பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவுடன் இணைப்பாக்கம் செய்யும்.

### குழுவின் செயற்பாடுகள்

1. சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை ஒழித்தல் மற்றும் சிறுவர்களின் பாதுகாவல் வழிமுறைகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்.
2. உளச் சமூக செயற்பாடுகள்.
3. ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.
4. தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
5. அழகியல் மற்றும் இரசனை மேம்பாட்டுச் செயற்பாடுகள்.
6. பிள்ளைகளின் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
7. தரவு முகாமைத்தவம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள்.
8. மாணவர்களில் பெரும்பகுதியினர் பலவீனமாக உள்ள மற்றும் பிரதான பாடங்களின் அறிவினை அபிவிருத்தி செய்வதற்கான நவீன வழிமுறைகள் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள்.
9. பரீட்சை செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களும் நேர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களும்.
10. சிறுவர்களின் உணர்வுகள், தனித்துவத்தைப் பாதுகாக்கின்றவாறான வெளிப்படுத்தல்களும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டுவதற்கான மகிழ்ச்சி மற்றும் சோகத்திற்கான **(Happy and Sad Box)** பெட்டியொன்றைப் பேணிவரலும்.
11. குழுவினால் இனங்காணப்படுகின்ற பிற பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள்.
12. பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுச் செயற்பாடுகளை கணிப்பிடும் பொருட்டு கோட்ட, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.

வின் செயற்பாடுகளுக்காக குழுவின் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுவதன் மூலமாக நிதியங்களைத் ட்டுதல் மற்றும் அதன் செயற்பாடுகளுக்காக அப்பணத்தை ஈடுபடுத்துதல் பாடசாலையதிபரின் ற்பார்வை மற்றும் அங்கீகாரத்துடன் இடம்பெறல் வேண்டும். இவ்விதமாக சேகரிக்கப்படும் பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கில் வரவு வைக்கப்பட்டு அதனோடு இணைந்த செலவுத் தலைப்பாக பேணிவரப்படல் வேண்டும்.

எமது நாட்டின் சிறுவர் தலைமுறையினரை அனைத்துவிதமான துஷ்ப்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளவும் தமது சிறுவர் பருவத்தில் கிடைக்க வேண்டிய சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தவும் அவசியமான சகல வழிமுறைகளும் பாடசாலையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் மூலமாக இப்பணிகளை மிகவும் எளிதாக ஈடேற்றிக் கொள்ள இயலுமென்பதால் ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவொன்றை நிறுவ வேண்டியதும் அதனைப் பேணிவர வேண்டியதும் ஒவ்வொரு பாடசாலையதிபரினதும் கடமையாகுமென்பதை வலியுறுத்துகிறேன்.

பாடசாலையின் ஆசிரியர் குழாமும் கல்வித் துறையுடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களும் இப்பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவினை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு, பாடசாலை மேற்பார்வை செயற்பாட்டின் போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயற்பாடு மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றியீட்டச் செய்யும் பொருட்டு உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பினை எதிர்பார்க்கிறேன்.

ஒப்பம் / எச். எம். குணசேகர
செயலாளர்,
கல்வி அமைச்சு.

එච්. එම්. ගුණසේකර
ලේකම්
අධ්‍යාපන අමාත්‍යාංශය
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.

பிரதி - தவிசாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
இல. 330, தலவத்துகொட வீதி,
மாதிவெல.
) - தகவலுக்காக / ஆவன செய்வதற்காக

CM 013262 – 11,000 (2011/07) இலங்கை, அரசாங்க அச்சுத் திணைக்களம்.